**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 111/2021**
**வழக்கு சாட்சி PW– 13**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.மணிகண்டன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாபநாசம் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 4th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு முறிவு அறுவைசிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.07.2019 ம் தேதி, அதிகாலை 01.26 மணிக்கு 39 வயது மதிக்கத்தக்க சுமதி என்ற பெண்மணி அவசர சிகிச்சைப்பிரிவில் இடது கையில் வெட்டுக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்டார். அவரை அவசரசிகிச்சை மருத்துவர் மற்றும் பணியில் இருந்த எலும்புமுறிவு மருத்துவர் முதலுதவி சிகிச்சை அளித்தனர். மேலும் உடல் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை மருத்துவர் அவரை பரிசோதித்து அவரது இடது கை தசைநார்கள் வெட்டுப்பட்டுள்ளதை அறுவை சிகிச்சை செய்ய அறிவுறுத்தினர்.

அவருக்கு 02.08.2019 ம் தேதி, இடது கை தசைநார்களுக்கு தையல் போட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரை 06.08.2019 அன்று

மருத்துவ சிகிச்சை முடித்து மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் எனச் சான்று வழங்கினேன். அவருக்கு நெஞ்சு பகுதியிலும், இடது கையிலும் நுண்கதிர் படம் எடுக்கப்பட்டது. அவருக்கு நான் வழங்கிய சிகிச்சை விபரச்சான்று **அ.சா.ஆ.11** ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

காயம்பட்ட நபருக்கு நான் சிகிச்சை வழங்கவில்லை என்றால் வார்டில் ஒவ்வொரு நாளும் பணி செய்யும் மருத்துவர்கள் சுழற்சி முறையில் சிகிச்சை அளிப்பார்கள். நானும் அவ்வாறு சுழற்சி முறையில் வரும்போது சிகிச்சை அளித்துள்ளேன். நான் அறுவை சிகிச்சை செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் இருந்த மருத்துவர்.ஈஸ்வரபாண்டியன் என்பவர் தான் அறுவை சிகிச்சை செய்துள்ளார். அ.சா.ஆ.11 சிகிச்சை விபரக் குறிப்பில் மருத்துவர்.ஈஸ்வரபாண்டியன் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னிடம் இருக்கும் கேஸ்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆய்வாளர் விசாரணையில் மருத்துவர்.ஈஸ்வரபாண்டியன் அறுவை சிகிச்சை செய்ததாக நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பார்த்த காயங்கள் கீழே விழும் போது கூர்மையான பொருளில் பட்டால் ஏற்பட்ட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது ஆயுதத்தை காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. M.Sivamurugan, Junior Assistant, திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 17:31:06 +0530